DRAF

KEMENTERIAN PELAJARAN MALAYSIA

## KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# BAHASA TAMIL
# SK
# தமிழ்மொழி

## TAHUN 2
## ஆண்டு 2

2011

KEMENTERIAN PELAJARAN MALAYSIA

# DOKUMEN STANDARD KURIKULUM SEKOLAH RENDAH

*MODUL TERAS ELEKTIF*

# BAHASA TAMIL SEKOLAH KEBANGSAAN

தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழி

## TAHUN 2

ஆண்டு 2

Cetakan Pertama 2011
© Kementerian Pelajaran Malaysia

Hak Cipta Terpelihara.  Tidak dibenarkan mengeluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat kebenaran bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pelajaran Malaysia, Aras 4-8, Blok E9, Parcel E, Kompleks Pentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறை நம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

# ருக்குன் நெகாரா

இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்

பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்

அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்

சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்

நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | குறியிலக்கு | 7 |
| 3. | நோக்கம் | 7 |
| 4. | உள்ளடக்க அமைப்பு | 9 |
| 5. | கலைத்திட்டக் குவிவு | 10 |
| 6. | உள்ளடக்கத் தரப் பட்டியல் (ஆண்டு 1 - 6) | 14 |
| 7. | உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் | |
| | கேட்டல், பேச்சு | 18 |
| | வாசிப்பு | 19 |
| | எழுத்து | 21 |
| | செய்யுளும் மொழியணியும் | 22 |
| | இலக்கணம் | 23 |
| 8. | இரண்டாம் ஆண்டுக்கான செய்யுளும் மொழியணியும் | 24 |
| 9. | இரண்டாம் ஆண்டுக்கான இலக்கணம் | 24 |
| 10. | சொற்பட்டியல் | 25 |

## முன்னுரை

தொடக்கப்பள்ளிக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டம் ஏட்டுக் கல்விக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் மாணவர்களுக்குச் சுமையில்லாத முழுமையானதொரு கலைத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கலைத்திட்டம் கல்வி மேம்பாட்டுப் பெருந்திட்டத்தின் (2006 – 2010) இரண்டாவது கொள்கைக்கேற்பவும் அமைந்துள்ளது.

கலைத்திட்ட மேம்பாட்டுப் பணியானது ஆக்கமிக்கதொரு தொடர்ச்சியான நடவடிக்கையாகும். தொடக்கப்பள்ளிக்கான கே.பி.எஸ்.ஆர். (KBSR) கலைத்திட்டம் முதன் முதலாக 1983ஆம் ஆண்டு உருவாக்கம் கண்டது. இது 1993ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டமாக மேம்படுத்தப்பட்டு, 2003ஆம் ஆண்டில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. மேலும், இக்கலைத்திட்டம் 2009ஆம் ஆண்டில் தற்காலத் தேவைக்கேற்பவும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளவும் தர அடிப்படையிலான ஆவணமாக உருவாக்கம் கண்டுள்ளது.

**பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்ட அமைப்பு**

பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டம், கே.பி.எஸ்.ஆர். கலைத்திட்டக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் தேசியக் கல்வித்தத்துவத்திற்கேற்பவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**தேசியக் கல்வித்தத்துவம்**

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து, சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

## பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான கல்விக் குறியிலக்கு

### பாலர்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கு

மாணவர்களைத் தொடக்கப்பள்ளிக்குத் தயார்ப்படுத்தும் வகையில் அவர்களின் ஆற்றலை அனைத்துக் கூறுகளில் வளப்படுத்துவதையும் அடிப்படைத் திறன்களைக் கைவரப் பெறுவதையும் ஆக்ககரமான நடத்தையை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

### தொடக்கப்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கு

தொடக்கப்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கானது மாணவர்களின் முழுமையான ஆற்றலை மேம்படுத்துவதோடு சமன்நிலை, இணக்கம், உயர்வெண்ணம் ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்றது. மேலும், உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் ஆகிய கூறுகளை உள்ளடக்கிய மாந்தரை உருவாக்கத் துணைபுரிகிறது.

### கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்

கலைத்திட்ட அமைப்பு அறிவு பெற்ற திறமையான மனித மேம்பாட்டை உருவாக்க வழிவகுக்கின்றது. இதில் அடங்கியுள்ள அடிப்படைக் கூறுகள் உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் கொண்ட சமன்நிலையிலான மனிதர்களை உருவாக்க ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. கலைத்திட்ட அமைப்பிற்கான அடிப்படைக் கூறுகள் பின்வருமாறு:

1. தொடர்பு
2. ஆன்மீகம், நடத்தை, பண்பு
3. மனிதவியல்
4. அறிவியல் தொழில்நுட்ப அறிவு
5. உடலும் முருகுணர்ச்சியும்
6. சால்புடைமை




**விளக்கப் படம் 1 : கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்**

**தர அடிப்படையிலான பயிற்றியக் கலைத்திட்டம்**

பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றிற்கான கலைத்திட்டம் மாணவர்கள் அடைய வேண்டிய உள்ளடக்கத் தர, கற்றல் தர கூற்றுகளைக் கொண்டுள்ளது.

**உள்ளடக்கத் தரம்**

வரையறுக்கப்பட்ட பள்ளி கால அளவில் மாணவர்கள் கல்வி தொடர்பான அறிவு, திறன், பண்பு ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் அதன்படி இயங்குவதையும் உறுதிப்படுத்துவதே உள்ளடக்கத் தரமாகும்.

**கற்றல் தரம்**

ஒவ்வொரு உள்ளடக்கத் தரத்திற்கேற்பத் தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றை உறுதி செய்வதே கற்றல் தரமாகும்.

**பயிற்றி வகை**

மாணவர்கள் கைவரப்பெற வேண்டிய அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகள் உள்ளடக்கத் தர, கற்றல் தர வாயிலாக ஒருங்கிணைத்துப் பயிற்றியில் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பயிற்றியானது பிரதான அடிப்படைப்பயிற்றி, பிரதான கருப்பயிற்றி, தெரிவுசெய் பயிற்றி ஆகிய மூன்றையும் உள்ளடக்கியுள்ளது.

### அ) பிரதான அடிப்படைப் பயிற்றி

பிரதான அடிப்படைப் பயிற்றியில் வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல், சீர்தூக்கிப்பார்த்தல் ஆகிய திறன்களை மாணவர்கள் கைவரப்பெறுவதற்காக அறிவு சார்ந்த துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்றியில் மொழி ( தமிழ், மலாய், ஆங்கிலம், சீனம்), கணிதம், உடல் நலக்கல்வி, இஸ்லாமியக்கல்வி, நன்னெறிக்கல்வி ஆகியவை உள்ளன.

### ஆ) பிரதான கருப்பயிற்றி

பிரதான கருப்பயிற்றி அறுவகை அடிப்படைக் கூறுகளோடு ஆக்கச்சிந்தனை, ஆய்வுச்சிந்தனை, புத்தாக்கச்சிந்தனை ஆகியவற்றையும் உள்ளடக்கிய பயிற்றியாகும். மேலும், இப்பயிற்றியானது சமூகவியல், அறிவியல் தொழில்நுட்ப அறிவு, ஆக்கச்சிந்தனை ஆகிய கல்வித்துறைகளை உள்ளடக்கியுள்ளது.

### இ) தெரிவுசெய் பயிற்றி

இத்தெரிவுசெய் பயிற்றியானது தேசியப்பள்ளியில் தமிழ், சீனம், அரபு ஆகிய மொழிகளைக் கூடுதல் பாடங்களாக வழங்குகிறது. மாணவர்கள் இப்பாடங்களுள் ஒன்றினைத் தெரிவு செய்து கொள்ளலாம். இப்பாடம் பள்ளிப்பாட வேளைக்கு அப்பாற்பட்டுக் கற்பிக்கப்படும்.

**தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழிக் கலைத்திட்டம்**

தேசியப்பள்ளியில் தமிழ்மொழி கூடுதல் மொழியாகவும் இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் அணுகுமுறையிலும் அமைந்துள்ளது. தேசியப்பள்ளியில் தமிழ்மொழியானது தொடர்பு கொள்ளும் திறனை வளர்ப்பதோடு அம்மொழியைக் கற்பதற்கான வலுவான அடிப்படையையும் அமைத்துக் கொடுக்கிறது. மேலும், இத்திட்டம் நன்னெறிப் பண்பு, அறிவு வளர்ச்சி, நாட்டுப் பற்று, ஒற்றுமையுணர்வு முதலியன சமூகத்தில் உருவாகுவதற்கு வழிகாண்கிறது.

தேசியக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவரின் அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளில் சமச்சீர் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்மொழி வாயிலாகப் பிறருடன் தொடர்பு கொள்ளவும் தம் கருத்தைச் செம்மொழியில் வெளிப்படுத்தவும் இக்கலைத்திட்டம் வழிகாண்கிறது.

தேசியப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியை அடிப்படை நிலையிலிருந்து கற்பர். ஆகவே, தேசியப்பள்ளியின் தமிழ்மொழி கலைத்திட்டத்தின் உள்ளடக்கமானது மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதாகவும் இன்றைய சமுதாய வளர்ச்சிக்கு ஏற்புடையதாகவும் இருக்க வேண்டும். மேலும், இக்கலைத்திட்டம் மலேசிய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை முறையில் அடங்கியுள்ள குடியியல் கூறுகளையும் நாட்டுப்பற்றையும் முதன்மையாகக் கொண்டுள்ளது.

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக்கான தர ஆவணத்தில் குறியிலக்கு, நோக்கங்கள், உள்ளடக்கத் தரம், கற்றல் தரம், இலக்கணம் ஆகிய கூறுகளோடு செய்யுளும் மொழியணியும் இடம்பெற்றுள்ளன. இத்தர ஆவணம் அடிப்படைத் திறன்களோடு நல்லொழுக்கம், தன்மதிப்பு, தன்னம்பிக்கை, தலைமைத்துவ ஆற்றல், நாட்டுப்பற்று, ஆன்மீகம் ஆகியவற்றை வளர்ப்பதிலும் துணை நிற்கின்றது. மேலும், தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மிகுந்த பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, வரையறுக்கப்பட்டுள்ள உள்ளடக்கத் தரம் மற்றும் கற்றல் தரங்களை மாணவர்கள் அடைய ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டம், மாணவர்கள் மொழித்திறன்களைக் கைவரப்பெற்றுச் சிறப்பாகப் பயன்படுத்த துணைபுரிகின்றது. ஆகவே, ஆசிரியர்கள் துணைப் பாடப்பொருளையும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையையும் தயார் செய்யும் போது தனியாள் வேற்றுமைகள், பல்வகை கற்றல் பாணிகள், பல்வகை நுண்ணறிவுகள் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். இது மாணவர்களின் அறிவாற்றலையும் ஆளுமையையும் மேம்பாடடையச் செய்யும்.

## குறியிலக்கு

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவர்கள் தமிழ்மொழி வாயிலாகத் தொடர்பு கொள்ளும் திறனைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் தமிழ்மொழியைப் பயன்படுத்தவும் சமூகத் தொடர்பினை ஏற்படுத்தவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் வழிவகுக்கின்றது. மேலும், மாணவர்களுக்கிடையே நன்னெறிக் கூறு, நாட்டுப்பற்று, ஒற்றுமை ஆகியவற்றை வளர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

## நோக்கம்

தேசியப்பள்ளி தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை :

i. அன்றாட உரையாடலிலும் முறையான சூழல்களிலும் பேசப்படும் கருத்துகளைக் கவனமுடன் செவிமடுத்துப் புரிந்து கொள்ளுதல்.

ii. பல்வேறு சூழலுக்கு ஏற்பச் சரியான உச்சரிப்புடன் சரளமாகப் பேசுதல்.

iii. கருத்துகளைத் திரட்ட கலந்துரையாடுதல்; விவாதித்தல்.

iv. அறிவு, இலக்கியம் சார்ந்த பல்வேறு எழுத்துப் படிவத்தை வாசித்தல்; கருத்துகளைத் திரட்டி ஆக்கப்பூர்வமாகப் பரிசீலித்தல்.

v. பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றின் மூலம் நன்னெறிப் பண்பை வளர்த்தல்.

vi. பெற்ற அனுபவங்களையும் அறிவையும் பயன்படுத்தி எழுத்துப் படிவங்களைப் படைத்தல்.

vii. பல்வேறு நடவடிக்கையில் சரியான உச்சரிப்பு, எழுத்து, கலைச்சொற்கள், இலக்கணம், ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்துதல்.

viii. செய்யுள் மொழியணியின் பொருளை அறிந்து உய்த்துணரவும் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ளுதல்.

**ஆண்டு இரண்டில் மாணவர்கள் அடைய வேண்டிய நோக்கம்**

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல்வழி ஆண்டு இரண்டின் இறுதிக்குள் மாணவர்கள் அடைய வேண்டியவை :

i. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளுதல், அதற்கேற்பத் துலங்குதல்.

ii. சூழலுக்கேற்பப் பண்புச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.

iii. சொற்களைச் சரியாக ஒலித்தல்.

iv. சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்.

v. நல்ல கையெழுத்தில் சரியான வரி வடிவத்துடன் பிழையின்றி எழுதுதல்.

vi. மூன்று சொற்கள் கொண்ட வாக்கியம் அமைத்தல்.

vii. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துதல்.

viii. அடிப்படை இலக்கண அறிவைப் பெற்று சரியாகப் பயன்படுத்துதல்.

**உள்ளடக்க அமைப்பு**

தொடக்கப்பள்ளிக்கான தமிழ்மொழி தர ஆவணம் மாணவர்கள் அடைய வேண்டிய உள்ளடக்கத் தரத்தையும் கற்றல் தரத்தையும் வலியுறுத்துகின்றது. இக்கலைத்திட்டம் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதோடு, இலக்கணக் கூறுகளையும், செய்யுளையும் மொழியணியையும் ஒருங்கிணைப்பதுடன் கலைத்திட்டத்தின் உள்ளீடுகளையும் துணைப்பொருளாகக் கொள்கின்றன.

**கேட்டல் திறன்**

கேட்டல் திறனில் மாணவர்கள் பல்வேறு சூழல்களில் உன்னிப்பாகச் செவிமடுத்தும் ஒலி வேறுபாடு அறிந்து கொண்டும் செவிமடுத்தவற்றின் பொருளைப் புரிந்து கொண்டும் துலங்குவர்.

**பேச்சுத் திறன்**

பேச்சுத் திறனில் மாணவர்கள் நல்ல மொழியில் உரையாடிப் பிறருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதோடு, சிந்தித்துத் தங்களின் கருத்து, எண்ணம், தகவல் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் தெளிவுடனும் பிறருக்குக் கூறுவர்.

**வாசிப்புத் திறன்**

வாசிப்புத் திறனில் மாணவர்கள் சரளமாகவும் சரியான உச்சரிப்புடனும் உரக்க வாசித்துப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு ஆய்வுச் சிந்தனையுடன் வாசித்துக் கருத்துணர்வர்.

**எழுத்துத் திறன்**

எழுத்துத் திறனில் மாணவர்கள் எழுத்துப் பிழையின்றி, இலக்கண அமைதியுடன் நல்ல கையெழுத்தில் பார்த்து எழுதுவதோடு தங்களுடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சிந்தனைத்திறன்களைப் பயன்படுத்திக் கற்பனை வளத்துடன் படைப்புகளை உருவாக்குவர்.

**செய்யுளும் மொழியணியும்**

செய்யுள் மொழியணியின்வழி மாணவர்கள் வரையறுக்கப்பட்ட இலக்கியப் பகுதிகளை அறிந்து உய்த்துணர்வதோடு வளமான மொழியாற்றலுடன் படைப்புகளை உருவாக்குவர்.

**இலக்கணம்**

தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் இலக்கண அறிவைப் பெற்று அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவர்.

**மொழிமுறைமை**

மொழி செயற்படும் வகையினை மொழிமுறைமை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக மொழிமுறைமையில் இலக்கணக் கூறுகள், செய்யுள், பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி போன்றவை வரையறுக்கப்பட்டுள்ளன.

**சொற்களஞ்சியம்**

அருஞ்சொற்களும் கலைச்சொற்களும் இந்தச் சொற்களஞ்சியத்தில் அடங்கும். நாட்டின் மேம்பாட்டிற்கேற்பவும் கல்வி வளர்ச்சிக்கேற்பவும் தொடக்கப்பள்ளியில் சொற்களஞ்சியம் பெருக்கப்பட வேண்டும்.

**கலைத்திட்டக் குவிவு**

இக்கலைத்திட்ட உள்ளடக்கம் தமிழ்மொழியின் சிறப்பிற்கேற்பக் கற்றல் கற்பித்தலைச் செம்மைப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு அறிவுத்துறையைச் சார்ந்த ஏதுகளை உள்ளடக்கமாக எடுத்தாள்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

## பொதுவறிவு

குறிப்பிட்ட திறன்களை மேம்படுத்துவதற்காக எடுத்தாளப்படும் அறிவியல், புவியியல் போன்ற பிற பாடத்துறைகளின் உள்ளடக்கமே பொது அறிவுக்கூறாகும். மேலும், மாணவர்களின் அறிவாற்றலை வளர்க்க நடப்புச் செய்திகளைக் கற்றல் கற்பித்தலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## நற்பண்பு

ஒழுக்கமுடைய நல்ல மாணவரை உருவாக்கும் நோக்கத்தில் தமிழ்மொழிக் கல்வியில் நற்பண்புகளை விளக்கும் கூறுகள் இணைக்கப்பட்டுள்ளன. நற்பண்புகளை அன்றாட வாழ்க்கையில் ஏற்றுக் கடைபிடிப்பதன்வழி நல்ல இளைய தலைமுறையினரை உருவாக்க முடியும்.

## குடிமை

நாட்டுப்பற்றையும் குடிமையுணர்வையும் கற்றல் கற்பித்தலில் வலியுறுத்தி தாய் நாட்டின் மீது அன்பும் பற்றும் வளரத் துணைபுரிய வேண்டும். இதன்வழி நாட்டுப்பற்றும் கடமையுணர்வும் கொண்ட நற்குடிமக்களை உருவாக்க முடியும்.

## சமுதாய பண்பாட்டு நெறிமுறைகள்

மொழிப்பயன்பாட்டில் அடங்கியுள்ள மொழிப்பண்பு, மொழிநடை ஆகியவை சமுதாய பண்பாட்டு நெறிமுறைக் கூறுகளின் உள்ளடக்கங்களாகும். இவற்றில் மலேசியச் சமுதாயத்தின் நன்னெறிப் பண்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## புதிய நூற்றாண்டில் மதிப்புயர்வு தரும் திறன்கள்

மாணவரின் அன்றாட வாழ்க்கைச் சூழல்களுக்கும் உலக நிகழ்வுகளுக்கும் ஏற்ற வகையில் வகுப்பறை அனுபவங்கள் அமைய இத்தர ஆவணம் முக்கியத்துவம் வழங்குகின்றது. இக்கால கற்றல் கற்பித்தல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தமிழ்மொழி தர ஆவணத்தில் பல்வேறு திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. சிந்தனைத்திறன், தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன், வாழ்நாள் முழுவதும் கற்கும் திறன், எதிர்காலவியல் திறன், பல்வகை நுண்ணறிவு ஆகியன மதிப்புயர்வு தரும் திறன்களாகக் கருதப்படுகின்றன.

**சிந்தனைத்திறன்**

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்கள் நடவடிக்கைகளின் வாயிலாகவும் வினாக்களின் வாயிலாகவும் ஆக்கச் சிந்தனையையும் ஆய்வுச் சிந்தனையையும் தூண்டும் நடவடிக்கைகளின் வாயிலாகவும் சிந்தனைத்திறன்கள் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் எதிர்காலத்தில் அன்றாட வாழ்வுக்கும் தம் தொழிலில் ஏற்படும் சிக்கல்களைக் களையவும் அவற்றைப் பற்றிய முடிவுகளை எடுக்கவும் சிந்தனைத்திறன் இன்றியமையாததாகும்.

**பல்வகை நுண்ணறிவு**

பல்வகை நுண்ணறிவாற்றலில் மொழித்திறன், ஏரணம், இசை, இயக்கம், இடம், தன்னறி, சமூகம், இயற்கையியல் போன்ற நுண்ணறிவுகள் உள்ளன. மாணவரிடம் காணப்படும் பல்வேறு நுண்ணறிவை அடையாளம் கண்டு அவற்றிற்கேற்ப விளைபயன்மிக்க கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன்**

தகவல் தொடர்புத் தொழில்நுட்ப யுகத்தில் மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் அன்றாடப் பணிகளை நிறைவு செய்ய மென்பொருள்களைப் பயன்படுத்தவும் இணையத்தில் கிடைக்கப்பெறும் தகவல்களைத் திரட்ட கணினியைப் பயன்படுத்தும் அறிவை மாணவர்கள் பெற்றிருப்பது அவசியமாகும்.

**வாழ்நாள் முழுவதும் கற்கும் திறன்**

வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள தேவைப்படும் பயில்திறனைக் கைவரப்பெற்றிருப்பது அவசியமாகும். இத்திறனைக் கைவரப்பெற்றிருக்கும் மாணவர்கள் காலத்திற்கேற்ப அறிவை வளப்படுத்திக் கொள்வதோடு விரைவான மாற்றத்தை அடைந்துவரும் உலகியல் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலையும் பெற்றிருப்பர்.

**எதிர்காலவியல்**

எதிர்காலவியல் என்பது கடந்த கால, நிகழ்கால, எதிர்கால நடப்புகளையும் சிக்கல்களையும் உணரும் வகையில் மேற்கொள்ளப்படும் கற்றல் அணுகுமுறையாகும். இதன்வழி மாணவர்கள் நடந்தவற்றிலிருந்து நடக்கவிருப்பதை அனுமானித்து அதன் விளைவை ஊகித்து அதற்கேற்பத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வர்.

## விரவி வரும் கூறுகள்

விரவி வரும் திறன்களாக தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன், தொழில்முனைப்புத் திறன், ஆக்கமும் புத்தாக்கமும் ஆகியன இத்தர ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

### தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன்

தகவல் தொடர்புத் தொழில்நுட்ப யுகத்தில் மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் அன்றாடப் பணிகளை நிறைவு செய்ய மென்பொருள்களைப் பயன்படுத்தவும் இணையத்தில் கிடைக்கப்பெறும் தகவல்களைத் திரட்ட கணினியைப் பயன்படுத்தும் அறிவை மாணவர்கள் பெற்றிருப்பது அவசியமாகும்.

### தொழில்முனைப்புத் திறன்

கற்றல் கற்பித்தலில் தொழில்முனைப்புத் திறனை மாணவர்களுக்குக் கற்பிப்பதன்வழி அவர்களிடையே தொழில் முனைப்புத் திறன் ஒரு கலாச்சாரமாக உருவெடுக்க தொடக்கப்பள்ளிக்கான தர ஆவணம் வழிவகுக்கிறது. தொழில் முனைப்புத்திறனை அன்றாட வாழ்க்கையில் வழக்கப்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் தொழில் முனைவருக்கு இருக்க வேண்டிய தொழில் முனைப்புச் சிந்தனை, வாணிப நிர்வாகத்திறன், தொழில்நுட்பப் பயன்பாடு, தொழில்முனைப்புக் கோட்பாடு, நன்னெறிப் பண்பு ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

### ஆக்கமும் புத்தாக்கமும்

ஆக்கம் என்பது தனிமனிதர் ஒருவரின் உருவாக்கும் ஆற்றல், தீர்வு காணும் திறன், கற்பனையாற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்திப் புதியதொன்றை உருவாக்குவதாகும். புத்தாக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழலில் ஆக்ககரமான சிந்தனை வெளிப்பாட்டினையும் பயன்பாட்டினையும் குறிக்கின்றது. சால்பும் திறமும் பெற்ற மனித மூலதனத்தை உருவாக்குவதற்கு ஆக்கமும் புத்தாக்கமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. ஆக்க, புத்தாக்கச் சிந்தனையை மேலோங்கச் செய்வதன்வழி ஒருவர் தரமான படைப்புகளை உருவாக்கும் ஆற்றலைப் பெறுவார். இதுவே எதிர்காலத்தில் மலேசியர்களின் அன்றாட வாழ்வியல் முறையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழி உள்ளடக்கத் தரப் பட்டியல்
# ஆண்டு 1 – 6

| கேட்டல், பேச்சு | |
|---|---|
| 1.1 | எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். |
| 1.2 | சொற்களைச் சரியாக உச்சரிப்பர். |
| 1.3 | செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். |
| 1.4 | கேள்விகளுக்குச் சரியான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைக் கொண்டு பதில் கூறுவர். |
| 1.5 | பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர். |
| 1.6 | தகவல்களைக் கூறுவர். |

| வாசிப்பு | |
|---|---|
| 2.1 | சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.2 | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.3 | அருஞ்சொற்களின் பொருளை அறிவர். |
| 2.4 | வாசித்துப் புரிந்து கொள்வர். |

| | எழுத்து |
|---|---|
| 3.1 | நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். |
| 3.2 | சொல்வளம் பெருக்கிக் கொள்வர். |
| 3.3 | வாக்கியம் அமைப்பர். |
| 3.4 | கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். |
| 3.5 | சொல்வதை எழுதுவர். |
| 3.6 | கருத்துகளைக் கோவையாக எழுதுவர். |

| | செய்யுள் மொழியணி |
|---|---|
| 4.1 | ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.2 | கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.3 | உலகநீதியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.4 | திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.5 | இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.6 | உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.7 | இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.8 | மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.9 | பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |

| இலக்கணம் | |
|---|---|
| 5.1 | எழுத்திலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.2 | கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.3 | சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.4 | வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.5 | வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

# உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும்

## 1.0 கேட்டல், பேச்சு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 1.2 சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.7 இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.<br>1.2.8 இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.<br>1.2.9 சந்தச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.<br>1.2.10 குறில், நெடில் ஓசைச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.<br>1.2.11 மூவெழுத்துச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.<br>1.2.12 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.<br>1.2.13 ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.<br>1.2.14 ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். |
| 1.3 செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | 1.3.4 செவிமடுத்த கட்டளையைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.<br>1.3.5 செவிமடுத்த வேண்டுகோளைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.<br>1.3.6 செவிமடுத்த வாக்கியங்களைச் சரியாகக் கூறுவர்.<br>1.3.7 செவிமடுத்த பாடலைச் சரியாகப் பாடுவர். |
| 1.5 பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர். | 1.5.4 வடிவத்தையும் வண்ணத்தையும் அறிந்து கூறுவர்.<br>1.5.5 உறவினர்களின் உறவுப் பெயர்களை அறிந்து கூறுவர். |

## 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 2.1 சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.10 குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.11 நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.12 சந்தச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.13 க்க, ச்ச, ட்ட ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.14 படம் தொடர்பான சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.15 ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.16 ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.17 ங்க, ஞ்ச ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.18 ண்ட, ந்த ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.19 ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | 2.1.20 ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.21 த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.22 ண்ண, ன்ன ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.1.23 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.2 வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.2.1 சந்தப்பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.4 வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.4.3 இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br>2.4.4 மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர். |

## 3.0 எழுத்து

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 3.1 நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | 3.1.10 சொற்களைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர்.<br>3.1.11 சொற்றொடர்களைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். |
| 3.2 சொல்வளம் பெருக்கிக் கொள்வர். | 3.2.12 குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.2.13 நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.2.14 ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.2.15 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.2.16 ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.2.17 உயிர் எழுத்தைக் கொண்டு தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.2.18 இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| 3.3 வாக்கியம் அமைப்பர். | 3.3.2 மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியம் அமைப்பர். |
| 3.5 சொல்வதை எழுதுவர் | 3.5.3 மூவெழுத்துச் சொற்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுவர். |

## 4.0 செய்யுளும் மொழியணியும்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 4.1 ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.1.2 இரண்டாம் ஆண்டுக்கான ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.2 கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.2.2 இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.5 இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | 4.5.1 இரண்டாம் ஆண்டுக்கான இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர். |
| 4.7 இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | 4.7.1 இரண்டாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |

## 5.0 இலக்கணம்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 5.2 கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.2.1 கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.3 சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.4 ஒன்றன்பால், பலவின்பால் சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

## செய்யுளும் மொழியணியும்

**ஆத்திசூடி**

1 உடையது விளம்பேல்.
2 ஊக்கமது கைவிடேல்.
3 எண்ணெழுத் திகழேல்.
4 ஏற்ப திகழ்ச்சி.

**கொன்றை வேந்தன்**

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

**இணைமொழி**

1. அங்கும் இங்கும்
2. அல்லும் பகலும்

**இரட்டைக்கிளவி**

1. கலகல
2. சலசல

## இலக்கணம்

**கிரந்த எழுத்துகள்**

- பயன்பாட்டில் உள்ள கிரந்த எழுத்துகள்

**சொல்லிலக்கணம்**

- பால் - ஒன்றன்பால், பலவின்பால்

# சொற்பட்டியல்

**அ**

அக்டோபர்
அடையாளம்
அண்டை
அடுக்கு
அதிகாலை
அதிகம்
அலங்காரம்
அறிவிப்பு
அறிவு
அஞ்சல்
அணி
அமைதி
அன்னை

**ஆ**

ஆகஸ்ட்
ஆண்
ஆபத்து
ஆலயம்

**இ**

இடை
இதயம்
இப்படி
இன்பம்
இந்தியர்

**ஈ**

ஈகை

**உ**

உட்கார்
உழவர்
உண்மை
உயர்வு
உறவு
உழைப்பு
உறுதி
உணவகம்

**ஊ**

ஊக்கம்
ஊட்டு

**எ**

எது
எறும்பு
எண்ணிக்கை
எலும்பு
எண்ணெய்

**ஏ**

ஏப்ரல்
ஏழை

**ஒ**

ஒலி
ஒருமை
ஒழுக்கம்
ஒற்றுமை
ஒளி

**ஓ**

ஓடு
ஓங்கி
ஓய்வு
ஓசை
ஓடை

**க**

கட்டுரை
கலை
கவனம்
கருவி
கடலை
கடல்
கடினம்
கடுகு
கதிரவன்
கரும்பு
கண்காட்சி
கன்று
கம்பளம்
கழுகு
கன்னம்

**கா**

காப்பு
காயம்
கால்
காய்ச்சல்
காலணி
காற்றாடி
காட்சி
காரம்

**கி**

கிழக்கு
கிராமம்
கிழவன்
கிழங்கு
கிடங்கு

**கீ**

கீறல்
கீதம்
கீரி

**கு**

குழந்தை
குழு
குவளை
குடம்
குடிநீர்
கும்பல்
குருடு
குலை
குவியல்
குழல்
குண்டூசி
குயில்
குளியலறை
குளம்
குப்பைத்தொட்டி

**கூ**

கூடாரம்
கூர்மை

**கெ**

கெடுதி

**கே**

கேலிச்சித்திரம்

**கை**

கையொப்பம்
கைதட்டல்

**கொ**

கொடிமரம்
கொம்பு

**கோ**

கோபுரம்
கோலி
கோலம்

**கௌ**

கௌவு

**ச**

சட்டம்
சதுரம்
சபை
சந்தி
சருகுமான்
சர்க்கரை
சடங்கு
சவர்க்காரம்
சந்தம்
சபைகூடல்
சமம்

**சா**

சாலை
சாரல்
சாதனை

**சி**

சிரிப்பு
சிறை
சிற்றுண்டிச்சாலை
சிறப்பு
சில
சினம்
சித்திரை
சிப்பி
சில்லறை

**சீ**

சீனர்
சீனி

**சு**

சுளை
சுலபம்
சுவை

**சூ**

சூடு

**செ**

செவ்வாய்
செயல்
செம்பனை
செங்கல்

**சே**

சேதம்
சேலை

**சை**

சைகை

**சொ**

சொத்து
சொர்க்கம்

**சோ**

சோளம்
சோப்பு

**த**

தந்தை
தடவை
தப்பு
தபால்
தலைவன்
தண்டு
தவளை
தவணை
தண்டனை
தடி
தவறு

**தா**

தாதி
தாமதம்
தாள்
தாழ்வு

**தி**

திருமணம்

**தீ**

தீயவன்

**து**

துணிவு
துன்பம்
துணிக்கடை

**தூ**

தூய்மை

**தெ**

தென்றல்
தெரு
தெற்கு

**தே**

தேசிய  தினம்
தேசியக்கொடி
தேவை

**தை**

தைப்பூசம்

**தொ**

தொடக்கம்
தொலைபேசி

**தோ**

தோப்பு

**ந**

நண்பன்

**நா**

நாடு
நாட்டம்

**நி**

நிகழ்ச்சி
நினைவு

**நீ**

நீலம்
நீதிபதி

**நு**

நுழை

**நூ**

நூல்நிலையம்

**நே**

நேர்மை

**ப**

பத்து
பயிற்சி
பணக்காரன்
படை
பட்டணம்
பள்ளிவாசல்
பனி
பரிசளிப்பு
பருப்பு
பட்டாடை
பழக்கடை
பலகாரம்

**பா**

பாசம்
பாப்பா

**பி**

பிப்ரவரி
பிரிவு
பின்னல்
பிடுங்கு

**பீ**

பீங்கான்

**பு**

புத்திசாலி
புலி
புற்று
புத்தகம்
புதிர்

**பெ**

பெரியது
பெரியவர்

**பே**

பேரங்காடி
பேரிச்சம்பழம்
பேத்தி

**பொ**

பொய்
பொறுமை
பொழுதுபோக்கு
பொட்டணம்

**போ**

போர்
போல

**ம**

மகிழ்ச்சி
மயில்
மண்

**மா**

மாங்காய்
மாநிலம்
மாளிகை

**மி**

மிருகம்

**மீ**

மீதம்
மீன் தொட்டி
மீண்டும்
மீன் வலை

**மு**

முயற்சி
முறுக்கு
முத்து
முதல்

**மூ**

மூங்கில்
மூவர்

**மெ**

மென்மை

**மே**

மேளம்
மேற்கு
மேடை

**மை**

மையம்

**மொ**

மொழி
மொத்தம்

**மோ**

மோசம்
மோட்டார்வண்டி

**மௌ**

மௌலி

**யா**

யாழ்

**வ**

வருடம்
வங்கி
வகை
வயிறு
வயல்
வண்டு
வலை
வலி
வண்ணம்
வட்டம்
வகுப்பறை

**வா**

வார்த்தை
வானொலி
வானம்
வாசி
வாடி
வாழும்

**வி**

விளக்கு
வியாபாரி
விருப்பம்
விமானம்
விடை
விடுமுறை
விரைவு
விற்பனை

**வீ**

வீண்

**வெ**

வெள்ளம்
வெளியே
வெற்றி

**வே**

வேர்
வேண்டுகோள்
வேடிக்கை
வேதனை
வேல்
வேசம்

**வை**

வைரம்

Terbitan:

BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM
KEMENTERIAN PELAJARAN MALAYSIA
Aras 4-8, Blok E9
Kompleks Kerajaan Parcel E
Pusat Pentadbiran Kerajaan Persekutuan
62604 PUTRAJAYA
Tel: 03-8884 2000 Faks: 03-8888 9917
http://www.moe.gov.my/bpk